

# ஆற்றுப்படை

கற்றலும் சுற்றலும்!

யின் 38-வது பயணம்:

# பல்லவப்பாதை - மரபு நடை

Sep 5 & 6 -2026

www.aatrupadai.com

# பயணத்தில் காணவிருக்கும் வரலாற்று சிறப்புமிக்க இடங்கள்:

Day 1:

- திருக்கழுக்குன்றம்
- வல்லம் குடைவரை
- திருமுக்கூடல்
- பழைய சீவரம்
- உத்திரமேரூர் அனுமந்தண்டலம்
- கூழமந்தல்
- காஞ்சிபுரம் Stay

Day 2:

- மகேந்திவாடி
- கோனார் கோயில்,திருமால்பூர்
- தென்னேரி
- மணிமங்கலம்

## திருக்கழுக்குன்றம்

- வேதகிரீஸ்வரர் மலைக்கோவில்.
- பல்லவர் முதல் விஜயநகரர் வரை பல காலகட்டங்களின் கட்டடக்கலை.
- கல்வெட்டுகள் மூலம் நிலதானம் மற்றும் கோவில் நிர்வாக வரலாறு.
- மலைக்கோவில் கட்டுமான நுட்பம்.




## வல்லம் குடைவரை

- மகேந்திரவர்மன் பல்லவர் கால குடைவரைக் கோவில்.
- ஒரே பாறையை வெட்டி உருவாக்கப்பட்ட மண்டபம்.
- ஆரம்பகால பல்லவக் கலை மற்றும் தூணமைப்பு.
- குடைவரைச் சிற்ப வளர்ச்சியின் தொடக்க நிலை.




## திருமுக்கூடல்

- வெங்கடேசப் பெருமாள் கோவில்.
- சோழர் கல்வெட்டுகளில் மருத்துவமனை (ஆதுலர் சாலை) பற்றிய பதிவு.
- கல்வி, மருத்துவம், கோவில் நிர்வாகம் ஒன்றிணைந்த மையம்.
- நடுக்கால சமூக வாழ்க்கைக்கான முக்கிய சான்றுகள்.



## பழைய சீவரம்

- பல்லவர் மற்றும் சோழர் காலக் கோவில்.
- அரிய கல்வெட்டுகள்.
- பழமையான சிற்ப வேலைப்பாடுகள்.
- தொண்டைநாட்டின் முக்கிய வழிபாட்டு மையங்களில் ஒன்று.



## உத்திரமேரூர் – அனுமந்தண்டலம்

- உலகப் புகழ்பெற்ற குடவோலை தேர்தல் முறை கல்வெட்டுகள்.
- சோழர் கால உள்ளாட்சி நிர்வாகத்தின் சிறந்த சான்று.
- கிராம சபை செயல்முறை.
- கோவில் நிர்வாகமும் மக்கள் ஆட்சியும்.



## கூழமந்தல்

- பல்லவர்-சோழர் கால கட்டடக்கலை.
- அழகிய தூண்கள் மற்றும் கல் சிற்பங்கள்.
- அரிய கல்வெட்டுகள்.
- தொன்மையான கிராமக் கோவில் அமைப்பு.



## மகேந்திரவாடி

- மகேந்திரவர்மன் பல்லவரின் குடைவரைக் கோவில்.
- ஆரம்பகால பாறை வெட்டுக் கட்டடக்கலை.
- பல்லவர் கலை வளர்ச்சியின் முக்கிய சான்று.
- குகை அமைப்பு மற்றும் தூண்களின் வடிவமைப்பு.



## கோனார் கோயில் – திருமால்பூர்

- பல்லவர் மற்றும் சோழர் காலக் கோவில்.
- அரிய கல்வெட்டுகள்.
- சைவ சமய வளர்ச்சிக்கான சான்றுகள்.
- அழகிய சிற்ப வேலைப்பாடுகள்.



## தென்னேரி

- பண்டைய ஏரி மற்றும் நீர்மேலாண்மை அமைப்பு.
- சோழர் கால பாசன தொழில்நுட்பம்.
- ஏரியை மையமாகக் கொண்ட கிராம வாழ்க்கை.
- நீர்வள மேலாண்மையின் வரலாறு.



## மணிமங்கலம்

- பல்லவர்–சாளுக்கியர் போரின் வரலாற்றுப் பகுதி.
- ராஜகோபாலப் பெருமாள் மற்றும் தர்மேஸ்வரர் கோவில்கள்.
- சோழர் கல்வெட்டுகள்.
- போர்வரலாறு, கோவில் கட்டடக்கலை, சிற்பங்கள்.



www.aatrupadai.com

Sep 5 & 6 -2026

AC சிற்றுந்து

தேநீர்
உணவு

வரலாற்று
ஆய்வாளர்

வசதியான AC
தங்குமிடம்

நுழைவு
பார்க்கிங்
சுங்கக்கட்டணம்

புறப்பாடு மற்றும்
வருகை:
@சென்னை

பயணக்கட்டணம்: ₹6999
GST உட்பட
(அனைத்தும் உட்பட)

+91 9384876772
+91 9487076772

www.aatrupadai.com

facebook/aatrupadai
instagram/aatrupadaitrz

முன்பதிவுக்கு:

# ஆற்றுப்படை - பயண விதிமுறைகள் & நிபந்தனைகள்

## பதிவு மற்றும் கட்டணம்

- பயணத்தில் இடம் உறுதி செய்ய முழு கட்டணமோ அல்லது அறிவிக்கப்பட்ட முன்பணமோ செலுத்தப்பட வேண்டும்.
- கட்டணம் செலுத்திய பிறகே பதிவு உறுதி செய்யப்படும்.
- இடங்கள் வரம்புடையவை என்பதால், முதலில் பதிவு செய்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

## ரத்து (Cancellation) விதிமுறைகள்

- பயணத்திற்கு 15 நாட்களுக்கு முன் ரத்து செய்தால், செலுத்திய தொகையில் இருந்து நிர்வாகச் செலவுகள் கழித்து மீதித் தொகை திருப்பி வழங்கப்படும்.
- பயணத்திற்கு 10 நாட்களுக்கு முன்பு ரத்து செய்தால், 15% தொகை மட்டும் திருப்பி வழங்கப்படும்.
- அதற்கு பின்னர் ரத்து செய்தால், எந்தவித தொகையும் திருப்பி வழங்கப்படாது.
- பயண நாளில் வராதவர்கள் (No Show) அல்லது கடைசி நேர ரத்து செய்தவர்கள் முழுக் கட்டணத்தையும் செலுத்தியதாகவே கருதப்படுவர்.
- தனிப்பட்ட காரணங்களால் பயணத்தில் கலந்து கொள்ள முடியாத சூழ்நிலைகளுக்கு ஆற்றுப்படை பொறுப்பேற்காது.

## குழந்தைகள் தொடர்பான விதிமுறைகள்

- பயணத்தில் பங்கேற்கும் ஒவ்வொரு குழந்தைக்கும் முன்பதிவு அவசியம்.
- குழந்தைகளுக்கும் தங்குமிடம், போக்குவரத்து, உணவு, தேநீர், தண்ணீர் உள்ளிட்ட ஏற்பாடுகள் செய்யப்படுவதால், குழந்தைகளுக்கான கட்டணத்தில் தள்ளுபடி அல்லது ரத்து வழங்கப்படாது.
- முன்பதிவு செய்யப்படாத குழந்தைகளை பயண நாளில் அழைத்து வருவதைத் தவிர்க்கவும்.
- குழந்தைகளின் பாதுகாப்பு முழுமையாக பெற்றோர் / பாதுகாவலர்களின் பொறுப்பாகும்.

## பயண ஒழுங்குமுறைகள்

- பயண நேரத்தை அனைவரும் கட்டாயம் பின்பற்ற வேண்டும்.
- தாமதமாக வருபவர்களுக்காக பயண அட்டவணை மாற்றப்படாது.
- குழுவின் ஒற்றுமை மற்றும் பயண அனுபவத்தை பாதிக்கும் வகையில் நடந்து கொள்ளக் கூடாது.
- வரலாற்றுத் தளங்கள், கோயில்கள் மற்றும் பொதுச் சொத்துக்களை மதித்து நடந்து கொள்ள வேண்டும்.
- பயணத்தில் கலந்து கொள்பவர்கள் தங்களுக்கு வேண்டியவற்றை அவர்களே கொண்டு வர வேண்டும்.
- பயணத்தில் ஏற்கனவே குறிப்பிட்ட தேநீர், உணவு மற்றும் குடிநீர் ஆகியவை மட்டுமே வழங்கப்படும். மேலும் தேவைப்படுவோர் அல்லது விருப்ப உணவு வேண்டுமெனில் அதற்கான கட்டணத்தை அவர்களே ஏற்க வேண்டும்.
- மரபு நடையில் மேற்கொள்ளும் பயணங்கள் வழக்கமான சுற்றுலாத் தளங்களுக்கு மாறான இடங்கள் என்பதால் கழிவறைகள் இருப்பது சற்று கடினம்; ஆகவே அதனை மனதில் கொள்ள வேண்டும்.

# ஆற்றுப்படை - பயண விதிமுறைகள் & நிபந்தனைகள்

## உடல்நல அறிவிப்பு

- சர்க்கரை நோய், உயர் இரத்த அழுத்தம், இதய நோய் உள்ளிட்ட உடல்நலப் பிரச்சினைகள் உள்ளவர்கள் தங்களின் மருந்துகளை கட்டாயம் எடுத்துவர வேண்டும்.
- தனிப்பட்ட உடல்நலக் காரணங்களால் ஏற்படும் பிரச்சினைகளுக்கு ஆற்றுப்படை நிர்வாகம் பொறுப்பேற்காது.
- அவசரநிலையில் முதல் உதவி மற்றும் மருத்துவ உதவிக்கான வழிகாட்டுதல் மட்டுமே வழங்கப்படும்.
- மருத்துவச் செலவுகள் மற்றும் சிகிச்சை தொடர்பான அனைத்து பொறுப்புகளும் பயணியையே சாரும்.
- பயணத்தின் போது இயற்கைச் சூழலில் எதிர்பாராத சம்பவங்கள் (பூச்சி அல்லது பாம்புக் கடி, விலங்குகளால் ஏற்படும் பாதிப்புகள், தவறி விழுதல் அல்லது பிற விபத்துகள்) ஏற்பட வாய்ப்புள்ளது.
- பங்கேற்பாளர்கள் தங்களது பாதுகாப்பில் முழு கவனம் செலுத்தி, பயண ஒருங்கிணைப்பாளர்களின் வழிகாட்டுதல்களை கட்டாயம் பின்பற்ற வேண்டும்.
- இத்தகைய எதிர்பாராத சம்பவங்கள் ஏற்பட்டால், ஆற்றுப்படை நிர்வாகம் இயன்றவரை உடனடி உதவி மற்றும் மருத்துவ உதவியைப் பெறுவதற்கான ஒத்துழைப்பை வழங்கும்; எனினும், அவற்றால் ஏற்படும் பாதிப்புகள் மற்றும் மருத்துவச் செலவுகளுக்கான இறுதி பொறுப்பு பயணியையே சாரும்.

## பயண மாற்றம் / ரத்து

- வானிலை, இயற்கை சீற்றம், அரசாங்க உத்தரவு அல்லது தவிர்க்க முடியாத காரணங்களால் பயணம் மாற்றப்படவோ அல்லது ரத்து செய்யப்படவோலாம்.
- அத்தகைய சூழ்நிலைகளில் மாற்று தேதி அறிவிக்கப்படும் அல்லது நிர்வாகக் குழுவின் முடிவின்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

### முக்கிய குறிப்பு

*பயணத்திற்கான பேருந்து, உணவு, தங்குமிடம், அனுமதி, வழிகாட்டுதல் உள்ளிட்ட அனைத்து ஏற்பாடுகளும் முன்கூட்டியே பதிவு எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு செய்யப்படுகின்றன. எனவே கடைசி நேர ரத்து மற்றும் கட்டண விலக்கு கோரிக்கைகள் ஏற்கப்படமாட்டாது.*

*பயணத்தில் பங்கேற்பதன் மூலம் மேற்கண்ட நிபந்தனைகள் அனைத்தும் ஏற்றுக்கொண்டதாக கருதப்படும்.*